Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 23 2024

வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 23, 2024 | ஒளி: 10 கதிர் 035 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



உள்ளூராட்சிமன்றத் தேர்தலை

# விரைவில் நடத்த உத்தரவு

■ பலரைப் பிரதிவாதிகளாகப் பெயரிட்டு மனுதாரர்கள் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்தாததன் மூலம், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிதியமைச்சின் செயலாளர் ஆகியோரின் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார் என உத்தரவிட்டுள்ள உயர்நீதிமன்றம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "2025 இல் சம்பள அதிகரிப்பு"

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அனைத்து அரச ஊழியர்களுக்குமான சம்பளத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அரச சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகளை தீர்க்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் உதய செனவிரத்ன தெரிவித்தார்.

கல்வித் தகைமை, அனுபவம், பொறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, கடைநிலை ஊழியர்களுக்கு 24 வீதமும், உயர்நிலை அதிகாரிகளுக்கு 24 முதல் 50 வீதத்திற்கு மேல் வரையான சம்பள அதிகரிப்பு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# கெஹெலியவின் விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட நான்கு சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 29ஆம் திகதி வரை நீடிக்க மாளிகாகந்த நீதிமன்ற நீதவான் வியாழக்கிழமை(22) அன்று உத்தர விட்டுள்ளார்.

தரமற்ற ஹியூமன் இமியுனோக்ளோபியுலின் ஊசி மருந்துகளைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கடந்த பெப்ரவரி 02 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மறுநாள் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தால் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# "வடக்கு, கிழக்கு வடகிழக்கு ஆகாது"


சவால்களுக்குத் தாம் ஒருபோதும் பயப்படுவதில்லை என்றும் சவால்களைத் தாம் விரும்புவதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் புதன்கிழமை (21) அநுராதபுரத்தில் ஆரம்பமானது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தாம் கொள்கைகளின் அடிப்படையில் அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும், செயற்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லத் தயார் எனவும் தெரிவித்தார்.

"நாங்கள் சவால்களுக்குப் பயப்படுவதில்லை. நான் சவால்களை விரும்புகிறேன். அதைத்தான் நான் என் தந்தையிடம் கற்றுக்கொண்டேன். நான் யாரையும் வெறுக்கவில்லை. அதனால், எங்கள் மீது சேறு பூசுவது பயனற்றது," என்று அவர் கூறினார்.

2005 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைமுறையிலிருந்த விவசாயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறிய ராஜபக்ஷ, விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதாகவும் கூறினார்.

தொடர்ச்சி P2



# 'AI தொடர்பான மாணவர் சங்கங்கள்'

100 பாடசாலைகளில் முன்னோடித் திட்டமாகச் செயற்கை நுண்ணறிவு தொடர்பான மாணவர் சங்கங்களை நடைமுறைப்படுத்தும் திட்டத்திற்கு அரசாங்கம் இன்று அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தரம் 6 முதல் 9 வரையான மாணவர்களின் பங்களிப்புடன் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதன்படி, இத்திட்டத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் ஏனைய பாடசாலைகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




# IMF ஒப்பந்தத்தை மாற்றினால் பணத்தை இழக்க நேரிடும்

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள உடன்படிக்கை தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சில ஜனாதிபதி வேட்பாளர்கள் மேடைகளில் கூறிய போதிலும், அவ்வாறு செய்வதால் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை இழக்க நேரிடும் என்றும் மீண்டும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கு – கிழக்கு உட்பட

# ஆளுநர்கள் ஐவர் சொத்து விவரங்களை அறிவிக்கவில்லை

■ ஜே.ஏ.ஜோர்ஜ்

நாட்டில் உள்ள ஒன்பது மாகாண ஆளுநர்களில் நான்கு ஆளுநர்கள் மாத்திரமே இதுவரை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# யாழில் எரிபொருள் நிரப்பும் ஊழியர் மீது வாள்வெட்டு

■ நிதர்ஷன் வினோத்




யாழ். வடமராட்சி, நெல்லியடி நகரில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதல்களுக்கு உள்ளான நபர், கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி வாள் வெட்டு தாக்குதல் சம்பவம் புதன்கிழமை (21) இரவு 11.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

# ஆடையின்றி தோசை சுட்டதால் வழக்கு




கொழும்பிலுள்ள பிரதான உணவுக் கடையொன்றில் மேலாடையின்றி தோசை தயாரிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விவகாரம் தொடர்பில், இரண்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்து, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வழக்குத் தாக்குதல் செய்துள்ளனர். பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.சந்திரசேனவினால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

"கமே கடை, தோசை கடை" உள்ளிட்ட பல்வேறு பெயர்களால் அறியப்படும் பல உணவுக் கடைகளுக்கு எதிராக மேலும் சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ராஜகிரிய மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுகாதாரமற்ற நிலையில் உணவு தயாரித்தல்,

தொடர்ச்சி P2

# பஸ்ஸை விட்டுவிட்டு ஜோடியாய் ஓடிய டயர்கள்





இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றின் பின்பக்க ஜோடி டயர்கள், பஸ்ஸை விட்டுவிட்டு 100 அடி தூரத்துக்கு உருண்டோடி புரண்டுகொண்டதுடன், டயர்களுக்கு முன்பாக டயர்கள் இன்றி நொண்டியடித்துக் கொண்டு ஓடிய பஸ், சுமார் 50 அடி தூரத்தில் வீதியிலேயே நின்றுகொண்ட சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.

பதுளை ஸ்பிரிங்வலி வீதியில் ஸ்பிரிங்வேலியிலிருந்து பதுளை நோக்கிச் வியாழக்கிழமை (22) பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பதுளை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டியொன்று முதலில் அச்சில் பின்பக்க டயர் ஜோடி கலந்து விபத்துக்குள்ளானது.

டயர்கள் கழன்றதன் பின்னர் பஸ் சுமார் 50 அடி முன்பாக ஓடி நடுரோட்டில் நிறுத்தப்பட்டது. கழன்ற டயர் ஜோடி 100 அடி தூரம் ஓடிசென்று நின்றுள்ளது.

இந்த விபத்தால்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# விரைவில் நடத்த உத்தரவு

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் மற்றும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பஃப்ரல்) தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பை, வியாழக்கிழமை (22) வழங்கிய போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சட்டமா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பலரைப் பிரதிவாதிகளாகப் பெயரிட்டு மனுதாரர்கள் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

2023 மார்ச் மாதம் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கக் கோரியே மேற்படி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர மற்றும் யசந்த கோதாகொட ஆகிய ஐவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய ஆஜராகியிருந்தார். தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிக்கெல் ஹட்டெஜ் ஆஜராகியிருந்தார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விரான் கொரியா, பஃப்ரல் இயக்கத்தின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அஸ்திக தேவேந்திராவும் ஆஜராகியிருந்தனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே ஆஜராகி இருந்தனர்.

# “வடக்கு, கிழக்கு…

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்காது எனவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட மாட்டாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மொழியையும் கலாசாரத்தையும் பாதுகாப்போம், எம்மால் என்ன செய்ய முடியுமோ அதை மாத்திரம் கூறுவோம், பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வடமாகாண மக்களை ஏமாற்ற மாட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் எரிபொருள் நிரப்பும்…

நெல்லியடி நகரிலுள்ள கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துன்னாலையை சேர்ந்த இருவர் புதன்கிழமை (21) இரவு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்து தகராறில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். இதன்போது, ஊழியரை திடீரென கத்தியால் தாக்க ஆரம்பித்துள்ளனர். தாக்குதலில் ஈடுபட்ட இருவரையும் அயையாளம் கண்டுள்ளதாகத் தெரிவித்த நெல்லியடி பொலிஸார், அவர்களை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# பஸ்ஸை விட்டுவிட்டு ஜோடியாய்…



இவ்வழியான போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. விபத்து இடம்பெற்றபோது, அந்த பஸ்ஸில், 100க்கு மேற்பட்ட பயணிகள் இருந்தனர். அவர்களுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை.

இந்த பயணிகளில் பெரும்பாலானோர் பணி நிமித்தம் சென்றனர் என்பதுடன், சிலர் பதுளை போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளிகள் எனவும் தெரியவந்துள்ளது.

பேருந்து சாலையை விட்டு விலகியிருந்தால், பயணிகளுக்கும், வீதிக்குக் கீழே உள்ள வீட்டிற்கும் சேதம் ஏற்பட்டிருக்கும்.

# ‘AI தொடர்பான…

இந்த முன்மொழிவு தொழில்நுட்ப அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதியினால் கூட்டு முன்மொழிவாக முன்வைக்கப்பட்டது.

“எதிர்கால உலகளாவிய போக்குகளை எதிர்கொள்ளக்கூடிய பிரஜைகளை உருவாக்கவும், பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை திறம்பட பெறுவதற்கும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பது பொருத்தமானது அமைச்சர் கூறினார்.

# ஆடையின்றி தோசை…

அசுத்தமான முறையில் உணவை சேமித்தல், பூச்சிகள் கொண்ட உணவு விற்பனை செய்தல், அசுத்தமான நிலையில் உபகரணங்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தி செய்தல், கழிவுகள் வடிகாலில் செல்வதைத் தடுத்தல், குப்பைத் தொட்டிகளைத் திறந்து வைத்தல் போன்ற பல குற்றச்சாட்டுகளின் கீழ் 06 கடைகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# ஆளுநர்கள் ஐவர்…

குறித்த ஆணைக்குழுவின் உத்தியேகப்பூர்வ இணையத்தள தகவலின்படி, ஐந்து ஆளுநர்கள் இதுவரை தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய அறிக்கைகளை வழங்கவில்லை.

இதற்கமைய, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே, வட மத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் மற்றும் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் தமது சொத்து மற்றும் பொறுப்புத் தகவல்களை வெளிப்படுத்தி உள்ளனர்.

அத்துடன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்எம்.சாள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், வட மேல் மாகாணத்தின் ஆளுநர் நசீர் அஹமட், சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க மற்றும் மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக ஆகியோர் தமது சொத்து, பொறுப்பு தொடர்பான விவரங்களை வெளியிடவில்லை. 2023இன் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 88(1) பிரிவில், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்துவது தொடர்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அத்துடன், 1988இன் 74ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975இன் 01ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தலுக்கான சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், நபர்களுக்கு மேலதிகமாக, 2023இன் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80ஆவது பிரிவின் படி மேலும் சில அதிகாரிகள், நபர்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் அவசியமாகும். ஊழலுக்கு எதிரான வலுவான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்துக்கு (IMF) அரசாங்கம் உறுதியளித்ததைத் தொடர்ந்து இயற்றப்பட்ட புதிய ஊழல் எதிர்ப்புச் டத்துக்கு அமைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பின்வருவோர் வெளிப்படுத்த வேண்டியது கட்டாயமானதாகும்.

# IMF ஒப்பந்தத்தை மாற்றினால் பணத்தை இழக்க நேரிடும்

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் புதன்கிழமை (21) நடைபெற்ற அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை நிபுணர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

‘தேசத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்’ என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இச்சந்திப்பில் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன சிறப்புரையாற்றினார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதற்கு நிலையான பொருளாதாரம் அவசியம் எனவும், சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சீனா எக்சிம் வங்கி மற்றும் 17 நாடுகளுடன் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து சலுகைகளையும் அரசாங்கம் இதுவரையில் பெற்றுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித் துறைக்கு முக்கிய பங்கு உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த பொருளாதார நெருக்கடியை அடுத்து வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் நிறுத்தப்பட்டதால் நிர்மாணத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும், வங்கிச் சலுகைகள் வழங்குதல், நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளைச் செலுத்துவது போன்ற இத்துறையில் பணிபுரிவோர் மீது சுமத்தப்பட்டிருந்த சுமையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததையும் நினைவு கூர்ந்தார்.

தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து புதிய முதலீடுகள் ஈர்க்கப்படும் போது நிர்மாணத்துறையும் வளர்ச்சியடையும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அத்துடன், கொழும்பு, பிங்கிரிய, திருகோணமலை, யாழ்ப்பாணம், கண்டி, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய புதிய முதலீட்டு வலயங்களில் சுற்றுலா ஹோட்டல் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்தல், பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொழும்பு, காலி மற்றும் கண்டியை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, “எமது பொருளாதாரத்தின் முக்கியப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் இலங்கையில் கடந்த பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட துறையான நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களாக நீங்கள் இன்று இங்கு கூடியிருக்கின்றீர்கள்.

நாம் ஒரு நெருக்கடியை மாத்திரம் சந்திக்கவில்லை. நாம் இரண்டு நெருக்கடிகளை எதிர்கொண்டோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக, கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் நாம் பாதிக்கப்பட்டோம். இந்த நிகழ்வுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட வரிக் குறைப்புகள் போன்ற கொவிட் தொற்றுக்கு முன்னர் நாங்கள் எடுத்த நிதி நடவடிக்கைகள் வருமானம் குறையக் காரணமாகியது. அந்த சூழ்நிலையில், எமது சவால்கள் மிகவும் சிக்கலானதாக மாறியது.

நாடு இவ்வாறானதொரு நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த போது நாம் எச்சரித்தோம். துரதிர்ஷ்டவசமாக, இந்த எச்சரிக்கையை ஒரு சிலர் மாத்திரமே கண்டுகொண்டார்கள். அன்று முன்வைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக இந்த நெருக்கடி தொடர்பில் மக்களுக்குச் சுட்டிக்காட்டினோம். எதிர்காலத்தில் இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படாமல் தடுக்க 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என தெரிவித்தோம். எனினும், அன்று நாம் விடுத்த இந்த எச்சரிக்கை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டது. ஏனைய குழுக்கள் யதார்த்தமற்ற வாக்குறுதிகளை அளித்தன. உலகளாவிய கொவிட் நோய்த் தொற்று நமது நிலைமையை மேலும் மோசமாக்கியது. 2020 மற்றும் 2021 இல் உலகப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. நாம் இன்னும் அதிலிருந்து மீண்டு வருகிறோம்.

இலங்கையின் நிலைமை குறித்து கலந்துரையாடும் போது, உலக நிலைவரத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். சீனாவில், கொவிட் காரணமாக, நிர்மாணத் துறை வீழ்ச்சி கண்டதுடன், அது நுகர்வோர் செலவினத்தையும் பாதித்துள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் கூட, நுகர்வோர் செலவினம் ஏற்ற இறக்கமாக உள்ளது. அந்த பொருளாதாரங்கள் ஸ்திரமடைய வேண்டும்.

நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு இந்த உலகளாவிய பின்னணியும் காரணமாக அமைந்தது. நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்குத் தேவையான இந்த மாற்றங்களை என்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் அப்போதே, சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்பு கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியிருந்தேன்.

பேராசிரியர் சிறிமல் அபேரத்ன விளக்கியது போன்று, நாம் தற்போது பொருளாதாரத்தையும் எமது கடனையும் ஸ்திரப்படுத்தியுள்ளதுடன், எம்மால் கடனை செலுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம். நாம் பணத்தை அச்சிட மாட்டோம் என்றும், வங்கிகளில் கடன் பெறப்போவதில்லை என்றும் உறுதி அளித்துள்ளோம்.

நமது வருமானத்திலேயே நாம் தங்கி இருக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும். அதனால், நான் உட்பட பலர் அதிக வரி செலுத்த வேண்டியுள்ளது. நமது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவது அடுத்த சவாலாகும். 2022 முதல் இயல்பு நிலைக்குத் திரும்ப ஐந்தாண்டு திட்டம் எம்மிடம் உள்ளது.

2026 ஆம் ஆண்டாகும்போது அதனை நாம் அடைய முடியும் என்று எதிர்பார்க்கிறேன். 2027 ஆம் ஆண்டாகும்போது 5% வருடாந்த வளர்ச்சியைப் பேணுவதே எமது இலக்காகும். இந்த இலக்குகளை அடைவது பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எமது பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான அடிப்படையை வழங்கும் மத்திய வங்கிச் சட்டம் மற்றும் அரச கடன் முகாமைத்துவச் சட்டம் போன்ற ஏனைய சட்டங்களையும் நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

நாட்டின் முன்னேற்றத்தில், நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித் துறைக்கு மிக முக்கிய பங்கு உள்ளது. குறிப்பாக வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் முடங்கியதால், இத்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டாலும், வங்கிச் சலுகைகள் வழங்குதல், நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையை வழங்குதல் போன்ற இத்துறைகளில் பணிபுரிபவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையைக் குறைக்க நாம் நடவடிக்கை எடுத்தோம்.

தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் ஆரம்பித்து, உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து புதிய முதலீடுகளை பெறும்போது, நிர்மாணத் துறைக்குப் பல வாய்ப்புகள் உருவாகும். காலி, கண்டி, கொழும்பு மற்றும் திருகோணமலையில் பாரிய ஹோட்டல் அபிவிருத்தி திட்டங்களையும் பிங்கிரிய, யாழ்ப்பாணம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் புதிய முதலீட்டு வலயங்களையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

மேலும், பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொழும்பு, காலி மற்றும் கண்டி ஆகிய இடங்களில் கணிசமான அளவு நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அபிவிருத்திக்காகப் பயன்படுத்த எதிர்பார்த்துள்ள, தற்போது பயன்படுத்தாத ஏராளமான அரச காணிகள் எம்மிடம் உள்ளன.


முதலீட்டாளர்களைக் கண்டறிதல், இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது உங்களுக்குரியது. இதன்போது, அரச துறையாக இருந்தாலும் சரி, தனியார்த் துறையாக இருந்தாலும் சரி, நீங்கள் அனைவரும் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம்.

உழைக்கும்போது செலுத்தும் வரி (PAYEE Tax) போன்ற நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இந்த முயற்சிகள், விரிவடைந்து வரும் பொருளாதாரம் மற்றும் நிர்மாண அபிவிருத்தித் துறையின் எதிர்காலத்துடன் எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.











# தேர் திருவிழா

கொழும்பு – மருதானை, கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த தேர்த்திருவிழா புதன்கிழமை (21) நடைபெற்றது.















# “21 வெற்றி உறுதி”

தேர்தலில் சிலர் முன்கூட்டியே வெற்றி பெற்றாலும், ரணில் விக்ரமசிங்ஹ சந்தேகத்திற்கு இடமின்றி செப்டெம்பர் 21ஆம் திகதி வெற்றியீட்டுவார் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் மனுஷ நாணயக்கார, வியாழக்கிழமை (22) இடம்பெற்ற வடிவேல் சுரேஷின் பதவியேற்பு நிகழ்வின் போது தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தலதா அத்துகோரள ஆற்றிய உரையானது சமகி ஜன பலவேகய வின் அடிமட்ட உறுப்பினர்கள் மத்தியில் எதிரொலிக்கும் அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைச் சுற்றித் திரளுவதற்கு அவர்களைத் தூண்டும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐக்கிய மக்கள் சக்தியின் கிராம மட்ட உறுப்பினர்கள் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள். ஆகவே தமது தலைவர் நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் திட்டமிட்டு செயற்படுகின்றதால், தங்களது ஆதரவை அவருக்கு வழங்க மக்கள் தயாராகவுள்ளனர்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்



என்ற வகையில் ஜனாதிபதி, தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டுதல்களையும் தொழில் அமைச்சுக்கு வழங்கிவருகிறார். எனவே, திட்டமிட்டபடி அமைச்சின் அனைத்து பணிகளும் தொடரும்.

தொழில் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் வடிவேல் சுரேஷ் தொழிலாளர் துறை, முறைசாரா தொழில் துறை தொழிலாளர்களின் ஓய்வூதியம், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினைகளையும் முன்னெடுத்து வருகின்றார்.

“பாராளுமன்றத்தில் தலதா அத்துகோரல ஆற்றிய உரையில் அரசியல் வட்டாரத்தில் பலரையும் எதிரொலிக்கும் முக்கியமாக ஜனதா தளத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாதவர்கள் கூட சஜித் பிரேமதாசவின் அனுபவமின்மை, ஜனாதிபதியாக வருவதற்கான அவரது பொறுமையின்மை மற்றும் பொறுப்புகள் அவருக்கு வழங்கப்பட்ட போது அதை ஏற்க மறுத்தது பற்றிய விடயங்களை நாம் முன்னரே கூறிவிட்டோம்.

தலதாவின் புதன்கிழமை அன்று பாராளுமன்ற விசேட உரையின் பின்னர் சஜித் பிரேமதாச தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

எதிகட்ச்சித்தலைவரிடம் முறையான அபிவிருத்தி வேலைத்திட்டம் எதுவும் இல்லை அவர் எல்லோரையும் சமநிலைப்படுத்த முயல்கிறார். அன்று அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான எதையும் செய்யும் ஒருவராக சஜித்தை நாம் அறிந்து கொண்டோம்.

அதிகாரத்திற்காக எதையும் செய்யும் தலைவர்கள் எங்களுக்குத் தேவை இல்லை. மாறாக நாட்டையும் அதன் எதிர்காலத்திற்காக முன்னோக்கி நகர்த்துவதற்குத் தேவையான அனைத்தையும் செய்யும் தலைவர் ஒருவரே எமக்குத் தேவைப்படுகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி தேர்தலில், சிலர் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டதாக நம்புகின்றனர். எது எவ்வாறாயினும் 21ஆம் திகதி எமது வெற்றியை உறுதி செய்வோம். எமது வெற்றியின் பின் ஐ.ம. ச. பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் இணைவார்கள். இந்நிலையில் சஜித் பிரேமதாச தேர்தலில் போட்டியிடுவதை மீள்பரிசீலிப்பாரா என்பது எமக்குத் தெரியவில்லை. அதற்குள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஐ.ம.ச. கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் வெளியேறி விடுவார்கள்” என தெரிவித்தார்.



## அதிவேகத்தில் வந்த அதிசொகுசு கார் விபத்து

விசேட வைத்தியர் ஒருவரின் மனைவி மற்றும் 16, 21 வயதுடைய இரண்டு பிள்ளைகளை ஏற்றிச் சென்ற அதிசொகுசு காரொன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்கு உள்ளானது.

ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் விசேட வைத்தியர் ஒருவருக்கு சொந்தமான அதிசொகுசு காரே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

பத்தேகம அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவாயிலுக்கு அருகில் 80ஆவது கிலோ மீற்றர் மைல் கல்லுக்கு அருகில் விபத்துக்குள்ளாகியுள்ளானதாகவும் விபத்தின்போது, 21 வயது மகன் காரை ஒட்டி வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த கார் மொனராகலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு தனியார் பேருந்தின் வலது பக்க உடற்பகுதியில் பாதுகாப்பு வேலிக்கு நடுவில் மோதி விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற அதேநேரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அம்பியூலன்ஸ் வண்டிகள் வருவதற்கு முன்னர், காரில் சிக்கிக் காயமடைந்தவர்களை வீதியில் பயணித்த வாகனங்களின் சாரதிகள் கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்கத் தூதுவரை சந்தித்தார் சிறீதரன்



நிதர்ஷன் வினோத்

இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க், துணைத் தூதுவர் றெனி எவர்சன் வர்ணி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் புதன்கிழமை (21) நடைபெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலின் போது, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்த சாதகத் தன்மைகள் குறித்தும், ஈழத்தமிழர்கள் சார்ந்த அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அாத்துடன், காசாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ICC) வழக்குத் தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்கா, ஈழத்தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படு கொலைக்கும் சர்வதேச நீதி பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும் என்றும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிலும் இந்த விடயம் சார்ந்து தங்களின் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தென்னாபிரிக்கத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதையலுக்காக யுவதி பலியெடுப்பு

ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டம் மந்தாரநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோனப்பிட்டிய தோட்டத்திற்குரிய சீனாபிட்டி தோட்ட அடர் வனப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் புதன்கிழமை (21) மதியம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக மந்தாரநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாகத் தோண்டி எடுக்கப்பட்ட பெண் ஹேவாஹட்ட முள்ளோயா தோட்டத்தைச் சேர்ந்த அக்கரப்பத்தனை-மன்றாசி பிரதேச வைத்தியசாலையில் தாதியாக பணியாற்றி வந்த சிவலிங்கம் தர்ஷினி (வயது 36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த ஆறுமாதம் மேலாக குறித்த பெண் காணாமல் போயுள்ளதாக அக்கரப்பத்தனை மற்றும் மந்தாரநுவர பொலிஸ் நிலயங்களில் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ள நிலையில், பொலிஸாரால் விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

அதேநேரத்தில், சம்பவத்தில் காணாமல் போன பெண் பாவித்து வந்த கை தொலைபேசி கடந்த இரண்டு தினங்களுக்கு முன் இயங்கியுள்ளதுடன், இதை ஆதாரமாகக் கொண்டு மேற்கொண்ட தேடுதலின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர், காணாமல் போயிருந்த பெண்ணுடன் வைத்தியசாலையில் பணியாற்றியவர் என்பதுடன், குறித்த நபர், கோனப்பிட்டிய- சீனாபிட்டி, கீனாகலை தோட்ட அடர் வனத்தில் புதையல் தோண்ட இப்பெண்ணைக் கடத்தி சென்று பழி கொடுப்பதற்காக கொலை செய்து புதைத்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## பணியாற்றாத ஊழியருக்கு சம்பளம் வழங்கியவர் கைது

களுத்துறை, நேபட பிரதேசத்தில் உள்ள பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான அரச தோட்டமொன்றில், பணியாற்றாத ஊழியர் ஒருவருக்கு மாதக்கணக்கில் சம்பளமாக ஆறு இலட்சம் ரூபாவை செலுத்தி வந்த தோட்ட நிர்வாக ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக வரக்காகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தோட்டத்தில் ஊழியர்களுக்கு 2024 ஜூலை மாத சம்பளம் வழங்குவதில், அதிக செலவு செய்தது தொடர்பாகத் தோட்ட நிறுவனத்தின் கணக்குத் துறையில் நடத்தப்பட்ட விசாரணையின் போது, பணியில் ஈடுபடாத ஒருவரின் பெயரில் 2023 நவம்பர் முதல் 2024 ஜூலை வரை சம்பளம் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தோட்ட முகாமையாளர் பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளுக்கு பின்னர் உடுகம பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# களிமண் ரொட்டியும் மேலாடை இல்லாத தோசையும்

மேலாடையின்றி தோசை சுட்டுக் கொண்டு இருந்ததாகக் கூறி கொழும்பு, ராஜகிரிய மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பிரபல உணவகமொன்றுக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் கொழும்பு நீதவான் நீதிமன்றில் இரண்டு வழக்குகள் புதன்கிழமை (21) தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்காக வழக்கு தாக்கல் செய்யப்படுவது முதன்முறையும் அல்ல இறுதியாகவும் இருக்காது.

பெரும் நகரங்களிலும் அதனை அண்மித்த நகரங்களிலும் உள்ள ஹோட்டல்களில் விற்பனை செய்யப்படும் உணவுகளும், நீண்ட தூரம் சேவைகளில் ஈடுபடும் பஸ்கள், தேனீர் அருந்துவதற்காக நிறுத்தப்படும் ஹோட்டல்களிலும், உணவுகள் சுத்தமானதாக இருக்காது. விலையும் அதிகமென, அவ்வப்போது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஒருசில ஹோட்டல்களில் கழிவறைகளுக்குச் சென்று திரும்பினால், சாப்பிடாமல் இருந்தாலும் வாந்தி வரும்.

உணவுப்பொருட்களில் மனித விரலில் பகுதி, நகம், தலைமுடி, ஊர்வனவற்றின் பாகங்கள், சட்டைப் பின், குண்டூசி இன்னோரன்ன பொருட்கள் மீட்கப்பட்டன. அதன் போதெல்லாம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, சட்டத்தின் முன்னிறுத்தி, தண்டனைகளும் வழங்கப்படும், எனினும், பொதுச் சுகாதார பரிசோதகர் சிலருக்கு எதிராக இலஞ்ச குற்றச்சாட்டுகளும் உள்ளன.

மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத உணவுகளுடன், விலைகளிலும் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படுவதில்லை. எரிவாயுவின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் பெரும்பாலானவர்கள் நுகரும் மா பொருட்களில் மாற்றமே இல்லை. மோசமான பொருளாதார நிலைமை ஏற்பட்டிருந்த வேளையில், ஏதோவொரு வகையில் சாப்பாட்டு வேளைகளைத் தவிர்த்தனர்.

மக்கள் கோதுமை மாவைச் சிலகாலமாக நாடினர். ரொட்டி மிகவும் எளிதான பொருள். ஒரு பருப்புக் கறியுடன் சாப்பிட்டு விடலாம். அதில், அளவுக்கு அதிகமாக
உப்பு சேர்த்தமையினால் பலரும் உயர் இரத்த அழுத்தத்திற்கு உள்ளாகினர். மா உணவுகளும் தொற்றா நோய்களுக்கு வித்திட்டன.

உணவு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தால் நாமும் களிமண் பிஸ்கட்டை சாப்பிட்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். எனினும், இருப்பதிலும் சுகாதாரம் இல்லை.

களிமண் பிஸ்கட் என்பது ஹைட்டியில் ஒரு பொதுவான பஞ்ச உணவாகும். களிமண்ணை மிகச் சிறிய துண்டுகளாக வடிகட்டி, தண்ணீரில் கலந்து பிஸ்கட்டுகளாகப் பிசைந்து வெயிலில் வைத்து களிமண் பிஸ்கட் தயாரிக்கப்படுகிறது. சிறு குழந்தைகள் இந்த களிமண் பிஸ்கட்டை சாப்பிட்டு தண்ணீர் குடித்து பசியை போக்குகின்றனர். இது முதலை களிமண்ணை விழுங்குவதைப் போன்றது. உணவு பற்றாக்குறையாக இருக்கும் போது, முதலை களிமண் துண்டுகளை விழுங்குகிறது. களிமண்ணை உண்பதால் முதலைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. களிமண் பிஸ்கட் சாப்பிடுவதால் ஹைட்டி குழந்தைகள் பாதிக்கப்படுவதில்லை.

இலங்கையின் பெரும்பாலான முக்கிய நகரங்களில் பிச்சைக்காரர்கள் குப்பை வாளிகளால் சூழப்பட்டு இருப்பதைக் கண்டிருக்கலாம். பசியினால் இறந்திருக்கின்றனர். வீடுகளில் சமைக்க இயலாதவர்கள் ஹோட்டல்களையே நாடுகின்றனர். அவர்களுக்குச் சுகாதாரமான உணவுகளை, நியாயமான விலையில் வழங்க வேண்டும். மேலாடைகளைக் கழற்றி வீசிவிட்டு, உப்பு வியர்வையைச் சேர்த்துவிடக்கூடாது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன், எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனொ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நேரம் சரியாக இல்லை

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் மணிக்கூட்டு கோபுரம் அவ்வப்போது பிழையான நேரத்தை காண்பிப்பதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஓட்டமாவடி ஊருக்கு அடையாளமாக திகழும் இந்த மணிக்கூட்டு கோபுரத்தை உரிய முறையில் பராமரித்து இயங்க வைக்க ஓட்டமாவடி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

– எச்.எம்.எம்.பர்ஸான்



### போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 14

# அனுசரணை அரசியல்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையில் அனுசரணை அரசியலின் சமகால வெளிப்பாட்டின் வேர்கள் கொலனித்துவ காலத்திற்கு முந்தைய காலத்திலேயே காணப்படுகின்றன.

கொலனித்துவ தலையீடு மற்றும் நிர்வாகத்தால் கொலனித்துவத்திற்கு முந்தைய ஆதரவு உறவுகள் மாற்றப்பட்டன.

ஆனால், கொலனித்துவத்திற்கு முந்தைய ஆதரவின் வலுவான கூறுகள் ஐரோப்பிய காலனித்துவத்தின் மூன்று நீண்ட கட்டங்கள் (போர்த்துகீச, டச்சு மற்றும் பிரிட்டிஷ்) பொருளாதார சுரண்டல் மற்றும் நவீனமயமாக்கல் மூலம் தப்பிப்பிழைத்தன.

நாட்டில் நிலவும் சீரற்ற முதலாளித்துவ வளர்ச்சியானது, பெரும்பாலான இலங்கையர்கள் பாரம்பரிய விவசாய சமூகத்தின் பெரும்பாலும் கிராமப்புற எச்சங்களுடன் பிணைந்திருப்பதை உறுதிசெய்தது. அங்கு தேவைகளை வழங்குவது விவசாயப் பொருளாதாரத்தின் ஊடாக இயங்கும் நன்கு நிறுவப்பட்ட ஆதரவாளர் உறவுகளின் வலையமைப்பின் மூலம் வடிவமைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் சகாப்தத்தில், வளர்ந்து வரும் உயரடுக்கின் அரசியல் எதிர்காலம் பெரும்பாலும் விவசாயிகளின் பெரும் பகுதியினரைத் தேசிய அரசியலில் வெற்றிகரமாகச் சேர்ப்பதில் தங்கியிருந்தது.

ஆளும் வர்க்கத்திற்கும் கீழ்மட்ட மக்களுக்கும், குறிப்பாக விவசாயிகளுக்கும் இடையே அரசியல் கூட்டணியைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு நம்பிக்கைக்குரிய மூலோபாயத்தை அரச ஆதரவு வழங்கியது. 1930களில் இருந்து உலர் வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச அனுசரணையுடனான குடியேற்றத் திட்டங்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

சிங்கள தேசியவாத அரசியல்வாதிகளுக்கு, குறிப்பாக கீழ் நாட்டுப் பின்னணியில் உள்ளவர்களுக்கு, உலர் வலயக் குடியேற்றங்களை மேற்கொள்வது முக்கியமானதும் அவசரமானதுமான ஒரு திட்டமாகும். பிரித்தானியக்

கொள்கைகள் தமிழர்களுக்குச் சாதகமாக இருந்தது. அக்கொள்கைகளின் கீழ் சிங்களவர்கள் அநியாயமாக நடத்தப்பட்டார்கள் என்ற கதையாடல் இதற்கு உதவியது. இப்பின்புலத்தில் உலர் வலயக் குடியேற்றங்களின் தொடர்ச்சியானது, அதற்கான பயனுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் இல்லாத நிலையில், பெரும்பான்மை சிங்களவர்களை சமூகத்துடன் ஒருங்கிணைக்கும் சிங்கள உயரடுக்கின் முயற்சியாக மாறியது.

இந்தக் குடியேற்றத் திட்டங்கள் சிங்கள விவசாயிகளையும் அவர்களின் வாக்குகளையும் இலக்காகக் கொண்டு தங்கள் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சிங்கள அரசியல் உயரடுக்கின் நலன் மற்றும் முன்னுரிமைக் கொள்கைகளின் ஒரு பகுதியாகும். இந்த அனுசரணை அரசியலுக்கும் இலங்கையின் இன முரண்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையில் ஆளும் உயரடுக்கினரால் அரச இயந்திரங்கள் முழுவதிலும் அனுசரணை முறையின் நிறுவனமயமாக்கலுடன் அரச நிறுவனங்களின் அரசியல்மயமாக்கல் பல்வேறு கட்டங்கள் மற்றும் மாற்றங்களைக் கடந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, இது அரசியல் அணிதிரட்டலையும் தேர்தல் கூட்டணிகளைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு திட்டமிட்ட உத்தியாக இருந்து வருகிறது. இதன் மூலம் அரசியல் உயரடுக்குகள் தங்கள் ஒட்டுமொத்த அரசியல் ஆதிக்கம் மற்றும் மேலாதிக்கத்திற்கு கீழ் வர்க்க சம்மதத்தை நாடினர்.

மோசமான விளைவுகள் இருந்தபோதிலும், 1977 வரையிலான தசாப்தங்களின் '39 சோசலிச' அரசின் கீழும், மிகவும் தாராளவாத மற்றும் வலதுசாரிகளின் கீழும், அதிகாரத்துவம் மற்றும் பொதுத்துறை சேவைகள் போன்ற அரசு நிறுவனங்களின் திறமையான செயல்பாட்டில் ஒரு விரிவான அனுசரணை அரசியலுக்கான அமைப்பு உள்ளது.

ஒரு காலத்தில் உயரடுக்கு மேலாதிக்கத்தை ஒருங்கிணைப்பதில் முக்கிய பங்கைக் கொண்டிருந்த சோசலிசத்தால் ஈர்க்கப்பட்ட அரசின் சமூகநலக் கொள்கையானது சரிந்து, படிப்படியாக வலதுசாரி சொல்லாட்சியுடன் மறுவியாக்கியானத்திற்கு உட்பட்டது.

ஆளும் உயரடுக்கின் அரசியல் ஆதரவு அமைப்பு கொடுத்தோருக்கும் கொண்டோருக்கும் குறுகிய கால பலன்களை வழங்க முடிந்தாலும், குறுகிய கால ஆதாயங்களின் விலை நீண்ட கால பலன்களை இழப்பதாக இருந்தது.

மேலும், ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் அரச வளங்களை விநியோகித்தல் மற்றும் அரசியல் பங்கேற்பிற்காக அணிதிரட்டுதல் என்பன நியாயப்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், இலங்கையின் அனுசரணை அரசியலுக்கான கட்டமைப்பின் செயற்பாடு ஒரு பெரிய இயந்திரத்தை ஒத்திருக்கிறது.

பொருளாதாரம் மற்றும் அரசு குவிப்பு செயல்முறைகள் மீதான பல கட்டமைப்புக் கட்டுப்பாடுகளின் கீழ், ஆளும் உயரடுக்கினரால் ஆதரவளிக்கும் பலன்களைத் தொடர்ந்து விநியோகிப்பது எப்போதும் சாத்தியமில்லை.

இத்தகைய நிலைமைகளின் கீழ், உயரடுக்குகள் தங்கள் ஆதரவாளர்களால் தண்டிக்கப்படலாம், அவர்கள் தங்கள் தேர்தல் விசுவாசத்தைத் திரும்பப் பெறலாம். இது உயரடுக்கினரிடையே கடுமையான போட்டியையும், பிரிவுகளை உருவாக்கலாம். இன முரண்பாடுகளை கூர்மையடையச் செய்வதில் இதற்கும் பங்குண்டு. மகிந்த ராஜபக்ஷவின் கீழ், உள்நாட்டுப் போரே அனுசரணை அரசியலுக்கான ஒரு பொன்னான வாய்ப்பாக மாறியது.

இராணுவத் துறை மற்றும் இராணுவத்தை மையமாகக் கொண்ட அனுசரணை வடிவங்கள் குறித்த பரவலான குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன. அந்த நேரத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த ஜனாதிபதியின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொடர்புபட்ட மோசடியான இராணுவக் கொள்வனவுகள் ஒரு பெரிய ஊழல் என்பதைப் பலர் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

நிலையான டெண்டர் நடைமுறைகளிலிருந்து விலகிப் பல மில்லியன் டாலர் ஆயுத ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டதாகக் கூறப்படுகிறது. இலங்கையில், பல நாடுகளைப் போலவே, இராணுவக் கொள்வனவுகள் பொது ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதில்லை. மேலும், இதுபோன்ற ஊழல் பேரங்கள் பொதுவாகக் கண்டறியப்படாமல் போகின்றன. இராணுவக் கொள்வனவுகள் கணக்காளர் நாயகத்தின் வரம்பிற்குள் வராது, மேலும் இது போன்ற அப்பட்டமான பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான ஒரு '39பாதுகாப்பான வழியை' போர் ஏற்படுத்திக் கொடுத்தது.

1955ம் ஆண்டு உத்தியோகபூர்வ இரகசியச் சட்டம் போன்ற சட்டங்களின் படி இராணுவத்தில் ஏதேனும் சந்தேகத்திற்குரிய முறைகேடுகள் பற்றி பகிரங்கமாக விவாதிப்பது குற்றமாகும். இராணுவத்தின் மன உறுதியையும் தேசியப் பாதுகாப்பையும் சேதப்படுத்தாமல் இருக்க, இதுபோன்ற முறைகேடுகள் ஒருபோதும் பகிரங்கமாக விசாரிக்கப்படுவதில்லை.

ராஜபக்ஷ சகோதரர்களின் கீழ் வானளாவிய இராணுவச் செலவுகள் உள்நாட்டுப் போர் என்ற போர்வையில் நியாயப்படுத்தப்பட்டன. இலங்கையில் இராணுவ நிதியியல் பற்றிய சுவாரஸ்யமான ஆய்வுகள் 1977 ஆம் ஆண்டிலிருந்து, ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூக பதட்டங்களின் நீண்ட காலம் முழுவதும், பின்னர் சந்தை சீர்திருத்தங்கள் மற்றும் தனியார்மயமாக்கலின் போதும், அரசியல் ஸ்திரத்தன்மையைத் தக்கவைப்பதற்கான வழிமுறையாக இராணுவம் இருந்ததைக் காட்டுகிறது. குறிப்பாக இராணுவ வேலைவாய்ப்பு பெரும் எண்ணிக்கையிலானோருக்கு வேலைகளை வழங்கியது. இது சமூக நிலைமைகளைக் கொஞ்சம் சீர்படுத்தியது.

இதன் வழி இனமுரண்பாடு போராக உருவெடுக்கும் முன்னர் இராணுவம் என்பது தொடர்ச்சியான இலங்கை அரசாங்கங்களின் "அனுசரணை அரசியலின்" முக்கிய பகுதியாக உருவெடுத்துவிட்டது.

போரின் போதும் போருக்குப் பின்னரும் ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது ஊழல், குடும்ப அரசியல் மற்றும் அரசியல் சார்பு போன்ற குற்றச்சாட்டுகளின் அளவு மற்றும் தீவிரம் இருந்தபோதிலும், போர் வெற்றியின் தொடர்ச்சியான மகிழ்ச்சி மற்றும் விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்விக்கு நன்றி, ஆகியன பல வாக்காளர்களிடமிருந்து குறுகிய காலத்தில் முறைசாரா மன்னிப்பைப் பெற்றதாகத் தெரிகிறது.

இறுதியாகச் சிங்கள-பௌத்த அரசை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக இலங்கையின் தென்பகுதி கருதியது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான தீர்க்கமான இராணுவ வெற்றியானது சிங்கள-பௌத்த தேசியவாத உயரடுக்கின் சிங்கள பெரும்பான்மை மீதான மேலாதிக்கத்தை மீண்டும் புதுப்பித்தது.

இது போரின் முடிவில் ராஜபக்ஷவை தொடர்ந்து ஆதரித்தது. எவ்வாறாயினும், போருக்குப் பிந்தைய இலங்கையின் பொருளாதார நிலைமையானது அனைவருக்கும் மிகவும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியது.

மேலும் இது ஏற்கனவே அணிதிரட்டப்பட்ட மற்றும் கருத்தியல் ரீதியாக அதிக கட்டணம் செலுத்தப்பட்ட குழுக்களை நிர்வகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் புதிய உத்திகளை உருவாக்குவதற்கு அதிகாரத்தில் உள்ள ஆட்சிக்குச் சவாலாக இருந்தது. உள்நாட்டுப் போரின் கடைசிக் கட்டத்தில் ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் மீது போர்க் குற்றச் சாட்டுகளை முன்வைத்த மேற்கத்திய நன்கொடையாளர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு நிலைமையை மேலும் சவாலாக மாற்றியது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட போருக்குப் பிந்தைய சமாதான பலன்கள் மற்றும் மனிதாபிமான உதவிகள், அவர் எதிர்பார்த்தபடி நிறைவேறவில்லை.

# IOM ஸ்ரீலங்காவுடன் eChannelling கைகோர்ப்பு



SLT-MOBITEL இன் துணை நிறுவனமான eChannelling, ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளுக்கான புலம்பெயர்வுகளுக்கு அவசியமான சுகாதார மதிப்பாய்வுகளை மேற்கொள்வதற்கான இலவச ஒன்லைன் முற்பதிவுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக International Organization for Migration (IOM) ஸ்ரீ லங்கா உடன் கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது.

புலம்பெயர்வோர் மற்றும் பயணங்களை மேற்கொள்வோருக்கு அவசியமான, பயனளிக்கும் பரிபூரண சுகாதார மதிப்பாய்வுகளை IOM வழங்குகின்றது. இந்த புதிய பங்காண்மையினூடாக, புலம்பெயர்வோருக்கு தமது IOM சுகாதார மதிப்பாய்வு முற்பதிவுகளை ஒன்லைனில் eChannelling இன் இணையத்தளத்தினூடாக அல்லது eChannelling மொபைல் app ஊடாக மேற்கொள்ள முடியும்.

eChannelling மற்றும் IOM இடையிலான கைகோர்ப்பினூடாக, இடையீட்டாளர்களின் தலையீடின்றி புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்போருக்கு தமது மருத்துவ பரிசோதனை முற்பதிவுகளை இலவசமாக முற்பதிவு செய்து கொள்ளும் வசதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட செயன்முறையினூடாக புலம்பெயர்வோருக்கு தமது பிரயாணத்துக்கு முன்பாக சுகாதார பரிசோதனை சேவைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படுகின்றன.

IOM இன் புலம்பெயர் சுகாதார பிரிவினூடாக, இலங்கையில் 2014ஆம் ஆண்டு முதல் விசேடத்துவமான சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த ஊழியர்களினூடாக, உயர் தரம் வாய்ந்த சேவைகள் நிபுணத்துவமான முறையிலும், வினைத்திறனான முறையிலும் வழங்கப்படுகின்றன. eChannelling உடன், விண்ணப்பதாரிகளுக்கு இலவச ஒன்லைன் முற்பதிவு கட்டமைப்புக்கு வழிநடத்தப்படுவதுடன், சௌகரியமான முறையில் முற்பதிவுகளை மேற்கொள்ளும் வசதியும் வழங்கப்படும்.

IOM இன் புலம்பெயர்வு சுகாதார பிரிவின் பிரதான புலம்பெயர்வு சுகாதார அதிகாரி சிமோனெட் டி அசிஸ் இந்தப் பங்காண்மை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “பாதுகாப்பான, ஒழுங்கமைக்கப்பட்ட மனித புலம்பெயர்வுகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை வழங்க IOM தன்னை அர்ப்பணித்துள்ளது. eChannelling உடன் கைகோர்த்துள்ளதனூடாக, புலம்பெயர் பயணிகளுக்கு தமது வெளிநாட்டு பயணங்களுக்கு முன்னர் அவசியமான சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான முற்பதிவுகளை சுமுகமான முறையில் மேற்கொள்வதை எம்மால் உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்” என்றார்.

மேலதிக தகவல்கள் மற்றும் பிரயாணத்துக்கு முன்னதான சுகாதார பரிசோதனைகளுக்குரிய இலவச ஒன்லைன் முற்பதிவுகளை அணுகுவதற்கு, eChannelling இணையத்தளத்துக்கு விஜயம் செய்யுமாறு நபர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

# குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகள் அன்பளிப்பு




Terumo Corporation அதன் விநியோக பங்காளரான ஹேமாஸ் சேர்ஜிகல் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடெட் உடன் இணைந்து, Nissei DS-11 குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகளை இலங்கை இதய நோயியல் வைத்தியர் நிறுவகத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. புத்தாக்கமான மருத்துவ தீர்வுகளினூடாக, சமூகங்களுக்கு வலுவூட்டல் மற்றும் இருதய சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு போன்றவற்றை இந்த நடவடிக்கை எடுத்துக்காட்டியுள்ளது.


புகழ்பெற்ற இருதய சிகிச்சை நிபுணரான வைத்தியர். டானியா பெரேராவினால் இந்தத் திட்டம் வழிநடத்தப்பட்டதுடன், இலங்கையில் இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் போன்றவற்றுக்கு எதிரான போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகவும் அமைந்துள்ளது. Nissei DS-11 குருதி அழுத்த கண்காணிப்பு இயந்திரம், குருதி அழுத்த கண்காணிப்பு தொழில்நுட்பத்தில் முன்னோடியாக திகழ்வதுடன், பயன்படுத்த இலகுவானதாகவும், துல்லியமான பெறுபேறுகளை வழங்குவதாகவும் அமைந்துள்ளது. இந்த நவீன சாதனம் ஜப்பானில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இரத்தஅழுத்தத்துக்கான ஐரோப்பிய சங்கத்தின் சான்றிதழையும் பெற்றுள்ளது. உயர் சிகிச்சை துல்லியத்தன்மை மற்றும் தங்கியிருக்கும் திறனை வழங்குகின்றது. உயர் தரம் வாய்ந்த அளவீட்டு சாதனங்களை தயாரிப்பதில் 60 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள Nissei, சுகாதார பராமரிப்பு இனங்காணல்களில் துல்லியத்தன்மை மற்றும் நுணுக்கத்தன்மைக்கான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பை மீள உறுதி செய்துள்ளது.

ஹேமாஸ் சேர்ஜிகல் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின் பிரதிநிதிகளான சிரேஷ்ட வியாபார முகாமையாளர் டிலன் சில்வா, தயாரிப்பு முகாமையாளர் (இடையீட்டு தயாரிப்புகள்) சுரெய்ன் அல்கம, உதவி தயாரிப்பு முகாமையாளர் (மருத்துவ பராமரிப்பு தீர்வுகள்) உதார லியனகே மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் லஹிரு பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர்.

இதய நோயியல் வைத்தியர் நிறுவகத்தின் தலைவரான இருதய சிகிச்சை நிபுணரான வைத்தியர். டானியா பெரேரா குறிப்பிடுகையில், இந்த குருதி அழுத்த கண்காணிப்பு இயந்திரங்களை அன்பளிப்பு செய்திருந்தமைக்கு நன்றி தெரிவித்தார். தமது சிகிச்சைசார் பயிற்சிப் பட்டறைகளின் போது வெளிப்பிராந்திய வைத்தியசாலைகளில் இந்த சாதனங்களுக்கு காணப்படும் கேள்வியின் பிரகாரம் அவற்றை இதய நோயியல் வைத்தியர் நிறுவகம் பகிர்ந்தளிக்கவுள்ளது.

உலகளாவிய ரீதியில் இதய நோய்கள் தொடர்ந்தும் பெருமளவு சுகாதார சவால்களை ஏற்படுத்தி வரும் நிலையில், இதுபோன்ற குருதி அழுத்த கண்காணிப்பு இயந்திரத்தின் தேவை மிகவும் இன்றியமையாதது. குருதி அழுத்தம் இனங்காணப்பட்ட நோயாளர்கள் முதல், கர்ப்ப கால குருதி அழுத்தத்துக்கு முகங்கொடுக்கக்கூடிய இடரை எதிர்நோக்கியிருக்கும் கர்ப்பிணி தாய்மாருக்கும் இந்த கண்காணிப்பு இயந்திரம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கும்.


Terumo Corporation மற்றும் ஹேமாஸ் சேர்ஜிகல் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடெட் ஆகியன இலங்கையில் இருதய சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு தம்மை தொடர்ந்தும் அர்ப்பணித்துள்ளன. Nissei DS-11 குருதி அழுத்த கண்காணிப்பு இயந்திரங்கள் அன்பளிப்பு போன்ற செயற்பாடுகளினூடாக, இருதய நோய்கள் மற்றும் பக்கவாதங்கள் போன்ற நிலைகளுக்கு எதிரான சுகாதார பராமரிப்பு நிபுணர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க எதிர்பார்க்கின்றன.



## அந்தி சாயும் நேரத்திலே

மயிலிறகு சேலை கட்டி மச்சான தேடி
மலை எல்லாம் ஏறிவந்தேன் ஓடியே
தென்பொதிகை காத்து வந்து
தென்றலாக வீசிடுதே தென்பாண்டி வீரா
சோலைக்கிளிரெண்டு பாடுது ராகம்
சொகமா இருக்கும் உன்னைய நினைச்சா
மாட்டுவண்டி பூட்டிக்கிட்டு
மல்லுக் கட்ட வந்த போதே
மஞ்சத் தாலி எடுத்து வைச்சேன்
மாலை போட நாள் பார்த்து
ஏரிக்கரை ஓரத்திலே வயல் வேலை
எசப்பாட்டுபாடிக்கிட்டே பாத்த மச்சான்
களைப்போட்டே களத்து மேட்டில இருப்பதேனோ
கனகாம்பரம் பூவைச்சி நான் வாறன்
முகம் வாடி நிற்பதென்ன பின்னேரம்
முறுக்கு மீச ராசாவே சோகமென்ன...

- சம்பூர் சமரன்



## விதியின் ரேகை...

இரவின் போர்வையைக்
கிழிக்கும் நிலவொளியொன்றில்
ஒற்றைப் பாறையில்
அமர்ந்தபடி
கட்டிக்கொண்டோம்
எமக்கான வீடொன்றை ....

கரும் பாறையில்
மோதிச் சிதறும்
நம் சொற்களை
சலசலப்பின்றி
நிதானமாய்
இழுத்துவரும் நதிநீரிடம்
இப்போது என்ன
சொல்வது....



நதிக்கரை மூங்கில்கள்
நம் பற்றியபேச்சுக்களை
நிறுத்திக்கொண்டன..
கிணுகிணுத்து இரையும்
நுளம்புகள்
மறந்துவிட்டன
நம் ரத்தச் சுவையை..
சவுக்குமரங்கள்
உதிர்க்கும் பூக்களில்
கூட நம் வாசம் இல்லை...

நாமின்றிச் சிணுங்கும்
பெருவெளியை
அதட்டி ஊமையாக்கும்
தனிமையின் வேர்கள்
எம்முள்ளும் படர்கிறது..

எந்தப்
புகைப்படங்களிலும்
திணிக்கமுடியா
எம் நினைவுப்
பொக்கி~த்தை
ஏலமிடும் அந்தநாளை
எண்ணியபடி
இயல்பாய் நகர்கிறது
விதியின் கால்கள்...

- சுடர் நிலா




## பொங்கியெழும் பூமித்தாய்

பொங்கியெழும் பூமித்தாய்
புவியெங்கும் பெருஞ்சோகம்
பாரெல்லாம் பேரழிவு பயங்கரமாய்
பல உயிர்கள்
பறிகொடுத்த பேரவலம் பொருட்கள்
பயிர் பெருநாசம்
பரிதாபக் கோலமிது பாவத்தைப்
புரிந்தவர் யார்?
இயற்கை அன்னையின் இயக்கங்கள்
யாவும்
இணைந்தே அழிப்பதில் இதிலே
ஒருநிலை
அழிப்பதற்கென்றே ஆவேசம்
கொள்ளும்
அத்தனை வெறியதன் ஆதிக்கம்
ஏனோ?
கடல் கொந்தளிப்பும் கக்கிடும்
கனலாய்
கொதித்தெழும் பிழம்பும்
கொந்தளித்தெங்கும்
பெருக்கெடுத்தோடும் பெருநதி
வெள்ளம்
புயற்காற்றுச் சுழலாய் பூமியின்
நடுக்கம்
கொளுத்தும் வெய்யில் கோடையில்
கொட்டும்
கடும்மழை காடு களனிகள் குடிகள்
காலம் காலமாய்க் கட்டிக் காத்தவை
கடிநொடிப்பொழுதில் கரைந்தே
போகும்
பனியும் குளிராய்ப் போர்த்துப்
படுத்து
பனிக்கட்டி மூடி பனிக்கட்டிச்
சறுக்கல்
சுற்றுலாப் பயண செல்வந்த நாடும்
சடுதியாய்ச் சரிந்தது சகலமும் மாறி
தலைகீழாகிய தொடர் கால
மாற்றத்தில்
தொடர்பவை யாவையும் திசைகள்
மாறியே
தேவைகள் திட்டங்கள் தடுமாறும்
நிலையில்
தலையைச்சுற்றிடும் தாக்கங்கள்
பலவகை
எல்லாநிலையிலும்
எத்தனைமரணங்கள்
பல்லாயிரத்தினில் புதைபவர்
மடிபவர்
தீக்கிரையாகத் தீயினில் மாய்வதும்
திக்கில்லா வாழ்வும் தீராத முடிவுகள்
செய்பவர் ஓரிடம் செழிப்புடன்
வாழ்கிறார்
சேர்ந்திடும் சகதிகள் சேரியில்
செறிவிடம்
அரசியல் பேசியே அகந்தையில்
வாழ்பவர்
அநியாயம் செய்கிறார் அதிகார
வழியினில்
அமைதியாய் இயக்கிடும் அற்புத
இயற்கையின்
ஆட்சிமை உலகினில் உயிரினம்
இயல்புடன்
சேர்ந்து வாழ்ந்திடும் சமரச
நிலையதை
சேர்ந்தே அழிப்பவர் சூத்திர தாரிகள்
அழிந்திடும் உலகமே அபாயச்
சங்கொலி
ஒலித்திடும் காலத்தின் மாற்றங்கள்
கோலங்கள்
நாமே மாறிடும் மனநிலை மறந்திடின்
நாட்கள் ஒருசில நாளிலம்
மறைந்திடும்

- கலாநிதி மு.ந. சிவச்செல்வன்
ஆக்லாந்து- நியூ சிலாந்து

## அம்மா

எழுத பழகியதும்
நான் கிறுக்கியமுதல் கவிதை
அவள் பெயர் தான்
“அம்மா...”
நான் கருவறையில்
எட்டி உதைத்த போதிலும்
மனம் மகிழ்ந்து சிரித்து
ரசித்தவளும் அவளே
“அம்மா...”
தன் வலிபொறுத்து
என்னைவெளியே எடுத்து
வடிவம் அமைத்தவளும்
அவளே
“அம்மா...”
பற்பல வார்த்தைகள் திரட்டி
அத்தனையும் அழகாய் கோர்த்து
ஆயிரம் கவிதை தீட்டினேன்
அவை அத்தனையும் தகர்த்து
ஒற்றை கவிதையாய்
ஆயிரம் மடங்கு
சந்தோஷத்தை
அள்ளித்தரும்
அழகியரசனைக்குரிய
ஒற்றைசொல் கவிதை
“அம்மா...”
சிகைநரை கொண்டாலும்
சிதையாத பாசம் உன்
பாசம்
“அம்மா...”

-மனோஜா இரத்தினகுமார்
(மழைக்குருவி)



# “யாராலும் மறுக்க முடியாது”

இலங்கை வரலாற்றில், மறக்க முடியாத ஒரு கணம் உள்ளது. அது வார்த்தைகள் மற்றும் இலட்சியங்களின் மோதல். இது வெறும் வாத, விவாதங்களை கடந்து கலாசார மறுமலர்ச்சியின் கலங்கரை விளக்கமாக மாறியது. 1873இல் இடம்பெற்ற பாணந்துறை விவாதம் வெறும் நம்பிக்கைகளின் மோதலாக இல்லாமல், காலனி ஆதிக்கத்தின் அலைக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்கள் எழுந்த ஒரு ஆழமான திருப்புமுனையாகும்.



ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு முக்கிய நாட்களில், வணக்கத்துக்குரிய மிகெட்டுவத்தே குணானந்த தேரரும் அவரது கிறிஸ்தவ சகாக்களும், பௌத்தத்தின் மினுமினுப்பான சுடரை மீண்டும் பற்றவைத்து, ஒரு தேசத்தை அடிமைத்தனத்தின் நிழலில் இருந்து மீட்டு அதன் ஆன்மீக மரபை மீட்டெடுக்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

1873 ஆகஸ்ட் 26 மற்றும் 28 ஆகிய இரண்டு நாட்களில் பாணந்துறை விவாதம் நடந்தது. இந்த விவாதம் இலங்கையில் நடந்த ஐந்து பெரும் விவாதங்களில் உச்சக்கட்டமாக கொண்டாடப்படுகிறது.

பௌத்த தரப்பு வணக்கத்திற்குரிய மிகெட்டுவத்தே குணானந்த தேரரால் பிரதிநிதித்து வப்படுத்தப்பட்டதுடன், கிறிஸ்தவ தரப்புக்கு வணக்கத்திற்குரிய டேவிட் டி சில்வா தலைமை தாங்கினார்.

காலனித்துவ ஆட்சியாளர்களின் அடக்குமுறை

1796 பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் தொடக்கத்தில் இருந்து, கிறிஸ்தவ மதத்தை பரப்புவது அவர்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக மாறியது. அவர்கள் சிங்களவர்களையும் அவர்களது பௌத்த மத நம்பிக்கையையும் ஓரங்கட்டினார்கள், அவர்களை முக்கியமற்றவர்கள் என்று ஒதுக்கித் தள்ளினார்கள்.

இந்த நேரத்தில், ஆங்கிலேயர்கள் கிறிஸ்தவத்தை நாட்டின் முதன்மையான மதமாக நிறுவ முயன்றனர். அவர்கள் திட்டமிட்ட முறையில் சிங்கள பௌத்தர்களை அனைத்து சமூக வாய்ப்புகளையும் பறித்து, அவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு, குறிப்பாக கரையோரப் பகுதிகளிலும் அதற்கு அப்பாலும் மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

பொருளாதார ரீதியில் நலிவடைந்த, கலாசார ரீதியாக அடிபணிந்த நிலையில், பௌத்தர் என்ற அடையாளமே சவாலுக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு காலத்தில் மக்கள் வாழ்ந்தனர்.

ஆயினும்கூட, இந்த இருளுக்கு மத்தியில், வணக்கத்துக்குரிய மிகெட்டுவத்தே குணானந்த தேரர் உட்பட வீரமிக்க பௌத்த துறவிகளின் தலைமையில் ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தின் வடிவத்தில் ஒரு நம்பிக்கையின் வெளிச்சம் வெளிப்பட்டது. இந்த இயக்கம் இலங்கை பௌத்தத்தின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அத்தியாயத்தை வெளிப்படுத்தியது, இது நம்பிக்கையின் மறுமலர்ச்சியின் விடியலைக் குறிக்கிறது.

பாணந்துறை விவாதத்துக்கு வழிகோலிய காரணம்,

பாணந்துறையிலுள்ள வெஸ்லியன் தேவாலயத்தில் பாதிரியார் டேவிட் டி சில்வா ஆற்றிய பிரசங்கமே பாணந்துறை விவாதத்திற்கான உடனடி காரணமாக காணப்பட்டது. அதில் அவர் பௌத்தத்தின் முக்கியமான போதனைகளை தவறாக சித்திரித்தமையால் பிக்குமார் அதிருப்தியடைந்ததுடன், பிக்குமாரும் தமது உபதேசத்தின்போது, அதனை விமர்சிக்கவே, இந்த விடயம் பாமர மக்களால் உடனடியாக எதிர்க்கப்பட்டது. இதனையடுத்து, மிகெட்டுவத்தே குணானந்த தேரருக்கு இது தொடர்பில் தேரர்கள் எடுத்துரைக்கவே, அதன் விளைவாக இறுதியில் பாணந்துறை விவாதத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதாவது, பாதிரியாரின் பௌத்த எதிர்ப்பு போதனைகள் தொடர்பான உரையாடல்கள் தொடரந்து உருவான நிலையில், விவாதமொன்றை நடத்தும் முன்மொழிவில் முடிவடைந்தது. இதனையடுத்து, பாணந்துறை விவாதம் 1873 ஆகஸ்ட் 26 மற்றும் 28 திகதிகளில் ரன்கொத் விகாரையை அண்டிய தொம்பகஹாவத்த மைதானத்தில் நடைபெறும் என்று இணக்கம் காணப்பட்டது.

இது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் பத்து நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன், தொம்பகஹாவத்தையின் அழகிய கரையோரப் பின்னணியில் பிரத்யேகமாக நிர்மாணிக்கப்பட்ட பந்தலில் விவாதம் நடைபெற்றது.

பாதிரியார் டேவிட் டி சில்வா மற்றும் சிறிமான்ன ஆகியோர் கிறிஸ்தவப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்திய நிலையில், பௌத்த தரப்பில், இரண்டு நாள் சொற்பொழிவு முழுவதும் ஒரே பேச்சாளராக வணக்கத்துக்குரிய மிகெட்டுவத்தே குணானந்த தேரர் பங்கேற்றார்.

இந்த அமைதியான கருத்துப் பரிமாற்றத்தைக் காண ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் கூடினர். குணானந்த தேரர் கிறிஸ்தவத்தைப் பற்றிய ஆழமான பார்வைகளை வழங்கும் அதேவேளையில், அனைவருக்கும் எளிதாக புரியும் வகையில் தர்க்கத்துடன் வாதங்களை முன்வைத்தார்.

விவாதத்திற்குப் பிறகு, ஆயிரக்கணக்கான பௌத்தர்களிடமிருந்து ‘சாது’ என்ற ஆனந்தக் கூக்குரல்கள் எதிரொலித்தன, அதே நேரத்தில், கூட்டம் அமைதியுடன் கலைக்கப்பட்டது, பௌத்த தரப்பு உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்ததுடன், கிறிஸ்தவ தரப்பு மனமுடைந்து போனதாக கூறப்படுகிறது.

உலகம் முழுவதும் பாணந்துறை விவாதத்தின் எதிரொலி, பாணந்துறை விவாதத்தின் இறுதி வெற்றியானது கிறிஸ்தவ கோட்பாடுகளின் தத்துவ ரீதியான தோல்வியில் அமைந்ததுடன், விவாதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டு பரவலாக விநியோகிக்கப்பட்டதுடன், இது வெளிநாடுகளில் உள்ள அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தது.

‘சிலோன் டைம்ஸ்’ பத்திரிகையின் அப்போதைய ஆசிரியர் ஜோன் கேப்பரின் அனுசரணையின் கீழ், எட்வர்ட் பெரேரா இந்த விவாதத்தை ஆங்கிலத்தில் மிக நுணுக்கமாக மொழிபெயர்த்தார்.

ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு உலகளவில் விநியோகிக்கப்பட்டன. கேப்பர் மற்றும் பெரேரா இருவரும், கிறிஸ்தவர்களாக இருந்தாலும், இந்த விவாதத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகித்தனர்.

விவாதத்தின் பிரதியை காலியில் உள்ள அமெரிக்கரான ஃபிபிள்ஸ் பார்த்து, அவர் அதை தனது தாயகத்திற்கு கொண்டு சென்றார், அங்கு அது மறுபதிப்பு செய்யப்பட்டு பரவலாக விநியோகிக்கப்பட்டது.

பாணந்துறை விவாதத்தை அறிந்த கேணல் ஹென்றி ஸ்டீல் ஒல்காட் மற்றும் மேடம் பிளாவட்ஸ்கி ஆகியோர் 1880இல் பௌத்த மதத்தின் சுடரை மீண்டும் ஏற்றுவதற்காக இலங்கைக்கு பயணம் செய்தனர். அவர்கள் கொழும்பு, காலி மற்றும் பிற பகுதிகளில் தியோசபிகல் சொசைட்டிகளை நிறுவினர், இதன் விளைவாக நாடு முழுவதும் பௌத்த பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு கேர்னல் ஒல்காட்டை பௌத்த மதத்தைத் தழுவத் தூண்டியது. இலங்கையில் பௌத்த கல்வியை முறைப்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவர் ஆற்றிய பங்களிப்புகள் விலைமதிப்பற்றவை. பரமவிஞானார்த்த சங்கம் நிறுவப்பட்டதும், எண்ணற்ற பௌத்த பாடசாலைகளை நிறுவியதும் அவரது அயராத முயற்சியின் பலனாகும்.

பாணந்துறை விவாதம் நாடு தழுவிய பௌத்த மறுமலர்ச்சியைத் தூண்டியது, வணக்கத்திற்குரிய மிகெட்டுவத்தே குணானந்த தேரர் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தார். புத்தரின் இலங்கை வருகை அல்லது மகிந்த தேரர் இலங்கைக்கு வந்ததைப் போன்று பாணந்துறை விவாதம் ஒரு முக்கியமான தருணமாகும்.

இந்த விவாதம் நாட்டின் அடித்தளத்தையே உலுக்கி, உலகெங்கிலும் உள்ள பௌத்தத்தின் ஆழமான தத்துவம் மற்றும் மதிப்பை எதிரொலித்ததுடன், அதன் வளர்ச்சிக்கு ஒரு அடித்தளமாக செயற்பட்டதை யாராலும் மறுக்க முடியாது.

# கண்டி வலய தமிழாசிரியர்கள் விளக்கம்

“ஆடாத ஆசிரியை நடுவரான சோகம்” என 14.08.2024 அன்று எமது தமிழ்மிரர் மின்னிதழின் மூன்றாம் பக்கத்தின் தலைப்புச் செய்திக்கு கண்டி வலய தமிழாசிரியர்கள் விளக்க கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.


ஆடாத ஆசிரியை நடுவரான சோகம்

நாடளாவிய ரீதியில் பல வலயங்களில் தற்போது நடைபெற்று வரும் தமிழ்த் தின போட்டிகளில், சில வலயங்களில் முறைகேடுகள் இடம்பெற்றமை தொடர்பான செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், கண்டி வலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(11) நடத்தப்பட்ட தமிழ்த் தின போட்டிகளில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த போட்டிகள் தெல்தோட்டையில் இடம்பெற்றன.

நடுவர் குழுவில் விடயதானம் தொடர்பில் எவ்விதமான அனுபவமற்றவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். உதாரணமாகத் தனி நடனத்துக்கான நடுவர் குழாமில், நடனமே கற்றுக் கொள்ளாத, எவ்விதமான முன் அனுபவமும் இல்லை ஆசிரியை இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நடுவராக பணியாற்றிய அந்த ஆசிரியை ஆரம்பப்பிரிவு நியமனம் ... மிழ்ப் பா... வாளர் ...

எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுடுகிறது மடியைப் பிடி என்பது போல, மாணவர்களைப் போட்டிக்கு அழைத்து வந்த ஆசிரியர்களில் ஒரு சிலரை நடுவர் குழுவில் இணைத்து போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

4 போட்டிகளுக்காக மாணவர்கள் காலை 8 மணிக்கு அழைக்கப்பட்டுள்ளது, போட்டிகள் நண்பகல் 12 மணியைக் கடந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போட்டிகள் இரவு 10 மணியைத் தாண்டி நிறைவடைந்துள்ளன.

தூரப் பிரதேசங்களுக்கு வந்திருந்த மாணவர்களில் சிலரை அவர்களுடைய பெற்றோர்களே அழைத்து வந்துள்ளனர். இரவு வேளையில் மாணவர்களை வைத்திருந்தமையால், பெற்றோர்களுக்கும் வலயத்தின் பொறுப்பதிகாரிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதங்களும் இடம்பெற்றுள்ளன.

வாக்குவாதம் முற்றிப் போகவே, நீங்கள் வந்து புள்ளிகளைப் போடுங்கள் என அதிகாரிகள் ...

நள்ளிரவு 12 மணியைக் கடந்து நிறைவடைந்துள்ளது. இதனால், வாகன வசதிகள் இல்லாத மாணவ, மாணவிகளும் பெற்றோர்களும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வீடுகளுக்குச் சென்று சேர்ந்துள்ளனர்.

மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டிய இவ்வாறான நிகழ்வுகள் முறையாக ஒழுங்கமைக்க கண்டி வலயக் கல்விப் பணிமனை தவறியுள்ளதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் வலயக்கல்விப் பணிமனையுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்த போதிலும் அம்முயற்சிகள் பலனளிக்கவில்லை.

கண்டி வலயக் கல்விப் பணிமனையின் விளக்கத்தை 011-7479372 அல்லது 011-7479375 என்ற தொலைபே இலக்கத்துடன் சனி,ஞாயிறு தினங்களைத் தவிர்த்து ஏனைய தினங்களில் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும். இல்லையேல், tamilmi... @gm... என்ற ...

11.08.2024 அன்று கண்டி தெல்தோட்டையில் நடத்தப்பட்ட கண்டி வலய தமிழ் மொழித்தினப் போட்டிகள் தொடர்பாக வெளிவந்த செய்திகளுக்கான மறுப்புச் செய்தி என்னும் தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த விளக்க கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் கோடரிக் காம்புகளாக, முகப்புத்தகத்தில் பொழுதுபோக்கும் ஆர்வலர்கள் ஒரு சிலர் கண்டி வலயத்தில் கிடக்கின்றனர் என்பது 11.08.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை தெல்தோட்டையில் நடத்தப்பட்ட கண்டி வலய தமிழ் மொழித்தினப் போட்டிகள் தொடர்பான கருத்துக்களை பிரசுரித்ததன் மூலம் தெளிவாகிறது.

இப்போட்டிகளின் போது,

நடுவர் குழுவில் நடனம் தெரியாத ஆசிரியை நடுவராக இணைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இது தவறான கருத்து. ஏனெனில், நடுவராக கடமையாற்றிய குறித்த ஆசிரியை பரதநாட்டியம் பயின்றவர் என்ற காரணத்தாலும் அவ்விடத்தில் நடுவர் பற்றாக்குறையால் தான் நடுவராக இணைந்தார். இங்கு எனக்கு நடனம் தெரியும் என சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறதா?

நடுவராகப் பணியாற்றிய ஆசிரியை, ஆரம்பப்பிரிவு நியமனம் பெற்ற வளவாளர் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதுவும் தவறான கருத்தாகும். அவர் வளவாளர் அல்ல, ஆசிரிய ஆலோசகர். வளவாளருக்கும் ஆசிரிய ஆலோசகருக்கும் வித்தியாசம் தெரியாதவர்களின் கருத்துக்களில் எந்தளவு உண்மை இருக்கிறது என ஆராய்ந்து பார்க்க வேண்டும். மேலும், ஆரம்ப பிரிவு ஆசிரிய நியமனம் பெற்ற ஒருவர், வெளி நிலை பல்கலைக்கழகத்தில் இணைந்து பட்டதாரியாக முடியும். என்பது கல்விப்புலத்தைச் சார்ந்த அறிவுடையோருக்கு தெரியும். இவ்வாறு பட்டம் பெற்ற நூற்றுக்கணக்கான ஆசிரியர்களில் இவரும் ஒருவர். பட்டம் பெற்ற பின்னர், தமிழ் பாட ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்றார்.

போட்டிகள் நண்பகல் 12 மணியை கடந்து ஆரம்பிக்கப் பட்டதாகவும் நிறைவடையும் போது நள்ளிரவு கடந்து விட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. தங்களுக்கு செய்தி எய்தவருக்கும் அம்பாக செயற்பட்டவருக்கும் கடிகாரத்தில் ஒழுங்காக சரியான நேரம் பார்க்கத் தெரியாது போலும். எந்த ஊரில் ஐயா நள்ளிரவில் போட்டி நடக்கும்? இது நோர்வே அல்ல, ஸ்ரீலங்கா என்பது தெரியாதோ என்னவோ? இதனைக் கூறியவர் கேட்போரும் வாசிப்போரும் கோட்டிகள் என நினைத்து விட்டார் போலும். (ஆரம்பித்த நேரம் மு.ப.9.30 நிறைவடைந்தது 7.25 பி.ப)

இதுவரை காலமும் கண்டி நகரிலேயே வலய மட்ட போட்டிகள் நடைபெற்றன. தெல்தோட்டை பிரதேசத்தில் கல்வி பயிலும் மாணவர்கள், பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் பெற்றோர்களின் பிள்ளைகள். இவர்கள் பெரும் சிரமத்திற்கு மத்தியில் போக்குவரத்து செலவு செய்து போட்டிகளில் இதுவரை காலமும் பங்குபற்றியுள்ளனர். இதன் காரணமாக இம்முறை தெல்தோட்டை பிரதேசத்தில் போட்டிகள் நடத்த தீர்மானிக்கப்பட்டது. (தெல்தோட்டை பிரதேச பாடசாலைகளில் எந்த ஒரு பாடசாலைக்கும் சொந்த வாகனம் இல்லை, பிள்ளைகளுக்கும் அப்படித்தான்) பெருந்தோட்டப் பிள்ளைகளின் நலன் கருதியே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இது தனிப்பட்ட ஒருவரின் முடிவு அல்ல. எந்த ஒரு நபரும் நூற்றுக்கு நூறு வீதம் மிகச் சரியாக தமது செயற்பாடுகளை செய்வார் என எதிர்பார்க்க முடியாது. குறைகள் இருக்கத்தான் செய்யும். இவ்வாறு நூறு வீதம் சரியாகச் செய்வார் இன்னும் பிறக்கவில்லை, அல்லது இறந்து விட்டார் என்பார்கள். அந்தவகையில், நடுவர்களை முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டு இருந்த போதும், அவர்கள் வருகைதராமை குறைபாடாக இருந்தது.

குறை கூறுவதற்கு தான் பட்டாளம் இருக்கிறதே தவிர, உதவுவது குறைவு. உதவும் உள்ளம் உள்ளவனுக்குத்தான் குறை கூறும் உரிமை உண்டு. எதையும் தீர விசாரிக்காமல் கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் வைத்துக் கொண்டு தீர்மானம் எடுப்பது அறிவிலிகளின் செயல்.

மேலும், ஆரம்பப்பிரிவு நியமனம் பெற்ற ஆசிரியர் என குறிப்பிடப்பட்ட நடுவராக கடமையாற்றிய குறித்த ஆசிரியை கண்டி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் மட்டுமல்ல, தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம் என பல கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றுபவர். இவர் கண்டி வலயத்தில் தமிழ் பாடத்துக்கென ஆற்றும் அளப்பரிய சேவை கண்டி வலய தமிழ் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்களுக்குத் தெரியும்.

தமிழ் மொழித்தினப் போட்டி என்பது மாணவர் மொழி ஆற்றலை வளர்க்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டதே தவிர, நகர்ப்புறப் பிரதேச மாணவர்களுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை என்பது சம்மன் இல்லாமல் ஆஜராகும் பேர்வழிகளுக்கு தெரியாது போலும். மேலும் போட்டிகளுக்கான தீர்ப்புகள் சரியான முறையில் வழங்கப்படும் பட்சத்தில் தான் வலயம், மாகாணம் தேசிய மட்டம் என்று பெறுபேறுகள் கிடைக்கின்றன என்பதைத் மனங்கொள்ள வேண்டும்.

நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி என்பது போல, தனிப்பட்ட சில காழ்ப்புணர்ச்சி, அழுக்காறு காரணமாக மேற்படி விடயங்கள் வலிந்து அலங்கரிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பிரச்சினையோ பொதுப்பிரச்சினையோ சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகப் பேசித் தீர்ப்பது அறிவுடையோர் செயல்.

வலயம் தொடங்கி தேசிய ரீதியில் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் திறமைக்கு தான் முதலிடம். அவரவர் பாரபட்சமாக சுயநலம் கருதியோ செயற்பாட்டால் அதற்கான பெறுபேறும் அவர்களுக்கு கிடைக்கும். தெய்வம் நின்று கொல்லும். தன்வினை தன்னைச் சுடும் கெடுவான் கேடு நினைப்பான், தீதும் நன்றும் பிறர் தர வாரா என்றெல்லாம் படித்தவர்கள் புத்தியைப் பயன்படுத்தி தங்களது சுய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வதே புத்திசாலித்தனம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிரியர் விளக்கம்

“ஆடாத ஆசிரியை நடுவரான சோகம்” என்ற தலைப்பில், நடன ஆசிரியின் பதவிநிலை தொடர்பான தவறுக்காக ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.


ஒரு செய்தியின் இரண்டு பக்கங்களையும் கூறவேண்டும். இச்செய்தியை எழுதுவதற்கு முன்னர், வலயக் கல்வி பனிமனையுடன் தொடர்பை ஏற்படுத்த முயற்சித்தோம் கைகூட வில்லை. அதன்பின்னர்தான். எமது ஆசிரியர் பீட தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டிருந்தோம். அதனுடன் தொடர்பை ஏற்படுத்திய கண்டி வலய தமிழாசிரியர்கள் இருவர் விளக்கம் தெரிவித்தனர். அதற்கு நன்றி. அன்று பல குறைகளை ஏற்றுக் கொண்டிருந்தீர்கள். அதில் சில விளக்கம் கடிதத்தில் இல்லை. எனினும், ஒருசில தவறுகளை சுட்டிக்காட்டியமையால், அடுத்தடுத்த தடவைகளில் இவ்வாறான போட்டிகளை நடத்தும் போது, நடுவர்கள் குறைபாடுகள் உள்ளிட்டவற்றை நிவர்த்திக்க முடியும். அதற்கு இந்த செய்தியை ஒரு ஆவணமாக எடுத்துக்காட்ட முடியும். என்பதுடன், தமிழ் மொழித்தினம் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. குறைபாடுகளை தீர்க்க நாமும் குரல் கொடுக்க தயாராக இருக்கிறோம்.

(ஆ+ர்)



வ.ஞானபண்டிதன் எழுதிய

# கதிர்காமத் திருமுருகன்




பதுளை சமத்துவ சங்க ஸ்தாபகர் வி.ஞானபண்டிதன் 1940ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட 'கதிர்காமத் திருமுருகன்' என்ற நூலின் எட்டாவது பதிப்பு தமிழ்நாடு பழனியில் இம்மாதம் 24-25ஆம் திகதிகளில் முத்தமிழ் முருகன் சர்வதேச மகாநாட்டில் (2024) வெளியிடப்படவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சன் செல்லத்துரையின் காத்திரமான அணிந்துரையுடன் கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை எச்.எச்.விக்ரமசிங்க வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இந்து சமய வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றிய ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறங்காவலர்களான அமரர்கள் தேசபந்து வி.ரி.வி.தெய்வநாயகம்பிள்ளை, க.சி.சிவசங்கரன்பிள்ளை, ஏ.எஸ்.எஸ்.சோமசுந்தரம்பிள்ளை, ஜி.எஸ். விஸ்வநாதபிள்ளை ஆகியோருக்கு இந்த புனித நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.



பருத்தித்துறை சைவபிரகாச சபையினர் 1940இல் வெளியிட்ட அட்டைபடமும் பழனியில் 1941இல் வெளியான நான்காம் பதிப்பின் அட்டை படங்களுடன் வேறு முக்கியமான பல படங்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

# 'அந்த கல்முனைக்குடி நாட்கள்'








'அந்த கல்முனைக்குடி நாட்கள்' எனும் கவிதை நூலின் பிரதியை உலகத் தமிழ் சங்கங்களின் சங்கமம் மற்றும் சென்னை தமிழச் சங்கம் என்பவற்றின் தலைவரான டாக்டர் டி.இளங்கோவனிடம் நூலாசிரியரும் கவிஞரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் அண்மையில் சென்னையில் வைத்துக் கையளித்தார்.

கவிதைத் தொகுதியை வரவேற்று பாராட்டியதோடு மட்டுமல்லாமல், சென்னையிலுள்ள நூலகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கென்று இவரிடம் இந்நூலின் 75 பிரதிகள் கையளிக்கப்பட்டன.

இந்நூலின் அறிமுக விழாவையும் கருத்தாடல்களையும் சென்னை தமிழ் சங்கத்தில் எதிர்வரும் நாட்களில் நடத்துவதற்கும் அதற்காக டாக்டர் இளங்கோவன், நூலாசிரியர் நிஸாம் காரியப்பருக்கு அழைப்பு விடுப்பதாகவும் கூறியது குறிப்பிடத்தக்கது.

■ முனீரா அபூபக்கர்

எஸ்.கே.சதாசிவம் எழுதிய

# 'வரலாற்றில் காரைநகர்'

■ அஸ்ஹர் இப்றாஹிம்

எஸ்.கே.சதாசிவம் எழுதிய 'வரலாற்றில் காரைநகர்' நூல் வெளியீடு கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் சனிக்கிழமை (10) இடம்பெற்றது,


காரைநகர் பற்றி பலரும் அறிந்திராத பற்பல வரலாற்று விடயங்களை தெளிவாகவும், எளிமையாகவும் இந்த நூல் கொண்டுள்ளது,

இதன்போது எஸ்.யோகேஸ்வரன் வரவேற்புரையையும், இ.தர்மராஜா தலைமை உரையினையும், சிரேஷ்ட ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா வாழ்த்துரையையும், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் நூல் அறிமுக உரையினையும், காரைக்கவி கந்தையா பத்மானந்தன் நயப்புரையினையும் வழங்கினார்கள். நூலின் முதற் பிரதியினை எஸ்.வீ.எம்.குணரெட்ணம் பெற்றுக் கொண்டார்.












# 'கொத்துவேலி'

■ அபு அலா

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை '76C' நண்பர்கள் வட்டத்தினதும் கல்முனை வடக்கு கலாசாரப் பேரவையினதும் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண மீன்பிடிப் பணிப்பாளர் சி.சுதாகரன் (நீலையூர் சுதா) அவர்களின் 'கொத்துவேலி' கவிதை நூல் அறிமுக விழா எதிர்வரும் சனிக்கிழமை (24) கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.




சூரன்.ஏ.ரவிவர்மாவின்

# 'திரைக்கு வராத சங்கதி'

■ பு.கஜிந்தன்

எழுத்தாளரும், ஊடகவியலாளருமான சூரன்.ஏ.ரவிவர்மாவின் 'திரைக்கு வராத சங்கதி' எனும் நூல் வெளியீட்டு விழா, தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில், சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.பாரதியின் தலைமையில் மங்கல விளக்கு ஏற்றலுடன் ஞாயிற்றுக்கிழமை (11) பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் வரவேற்பு உரையினை பிரான்ஸ் TNTR சர்வதேச ஊடகவியலாளர் ரவிச்சந்திரன் ரவிசக்தி நிகழ்த்தினார். அறிமுக உரையினை 'ஒருவன்' செய்தித்தள முகாமையாளர் அ.நிக்ஸன் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையினை ஜீவநதி, கடல் ஆகிய சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன் நிகழ்த்தியதை தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் நிகழ்த்தினார்.




முதல் பிரதியினை புத்தக ஏழுத்தாளர் அவர்களது சகோதரிகள் பெற்றுக்கொள்ள மூத்த ஊடகவியலாளர்களான அ.நிக்சன், இ.பாரதி, ஊடக கற்கைகள் தலைவி திருமதி பூங்குழலி ஆகியோர் இணைந்து வழங்கிவைத்தனர்.









பொலன்னறுவை மன்னனூர்ப் பாரதியின்

# 'முதல் கனவு'

■ அ.அச்சுதன்

தமிழ் அமுதம் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் ஈழத்து வளர்ந்து வரும் எழுத்தாளர் கழகத்தின் வெளியீடான பொலன்னறுவை மன்னனூர்ப் பாரதி என அறியப்பட்ட பா.பாலச்சந்திரனின் கன்னிக் கவிதை நூலான 'முதல் கனவு' கவிதை நூல் திருகோணமலை பொது நூலகக் கேட்போர் கூட மண்டபத்தில் புதன்கிழமை (21) வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்விற்கு தமிழ் அமுதம் கலைவட்டத் தலைவர் பாவலர் 'சம்பூரணி' தலைமை வகித்தார். அழைப்பாளர்களாக மூத்த அதிபரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம், மன்னம்பிட்டி மண்ணின் ஆசிரியர் சோமசுந்தரம் ரதன் சர்மா, தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலய அதிபர் எஸ்.ஆனந்தராஜா, திருமலை மண்ணின் மூத்த எழுத்தாளர் ஷெல்லிதாசன் ஐயா, மூத்த எழுத்தாளர் முருகாநந்தம் ஐயா, எழுத்தாளர் ஜனாப் PT அசீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அக வணக்கம் இடம்பெற்றது தொடர்ந்து, பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து ஈழத்தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. தொடர்ந்து வரவேற்பு நடனத்தை தி /தி/நிலாவெளி கைலேஸ்வராக் கல்லூரி மாணவிகள் நிகழ்த்தினர்.

வரவேற்புரையை தமிழ் அமுதம் கலை வட்ட உறவு யு.யுதேசிகா வழங்கினார். தொடர்ந்து தலைமையுரையினை தமிழ் அமுதம் கலைவட்டத் தலைவர் பாவலர் 'சம்பூரணி' அம்மணி நிகழ்த்தினார். தொடர்ந்து காத்திரமான நூல் அறிமுகவுரையினை மரபுக்கவிஞர் அம்.கௌரிதாசன் ஐயா நிகழ்த்தினார். தொடர்ந்து 'முதல் கனவு' கவிதை நூல் வெளியீடு கண்டது நூலினை நிகழ்வின் அழைப்பாளர்கள் வெளியீடு செய்ய முதற்பிரதியை சம்பூர் செல்லக்குட்டி அருணோதய நிறுவுனர் 'சமூகத் திறவு' செல்லக் குட்டி செந்தூரன் பெற்றுக் கொண்டார்.







வார்சா

# “எந்த நாட்டுக்கும் உதவி கரம்”

எந்த நாட்டில் பிரச்சினை வந்தாலும் இந்தியாதான் முதலில் உதவிக்கரம் நீட்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.





டெல்லியில் இருந்து போலந்து நாட்டு தலைநகர் வார்சாவுக்கு பிரதமர் மோடி செவ்வாய்கிழமை(20) காலை புறப்பட்டுச் சென்றார்.

முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய்க்குப் பிறகு 45 ஆண்டுகள் கழித்து போலந்து செல்லும் முதல் இந்தியப் பிரதமர் மோடி ஆவார்.

வார்சாவில் அவர் போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க், ஜனாதிபதி ஆண்ட்ரீஸ் டூடா ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவு மற்றும் வர்த்தகத்தை வலுப்படுத்துவது குறித்து பேசினார்.

மேலும், போலந்து தொழில் நிறுவன தலைவர்களை சந்தித்து இந்தியாவில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்த மோடி, அங்கு வாழும் இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து பேசினார்.

அப்போது, “எனக்கு கிடைத்த அன்பான வரவேற்புக்கு போலந்து நாட்டு மக்களுக்கு நன்றி. அனைவருடனும் இணையும் இந்தியா அனைவரின் வளர்ச்சியையும் விரும்புகிறது. எந்த நாட்டில் பிரச்சினை வந்தாலும் இந்தியாதான் முதலில் உதவிக்கரம் நீட்டும்” என்றார்.

சென்னை

# விஜய் கட்சி கொடிக்கு திடீர் சிக்கல்



நடிகரும் தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) தலைவருமான விஜய் வியாழக்கிழமை (22) பனையூரில் தனது கட்சி கொடியை அறிமுகம் செய்தார். கட்சியின் மேலே, கீழே சிவப்பு நிறமும் நடுவில் மஞ்சள் நிறமும் அந்தக் கொடியில் அமைந்திருந்தது. நடுவில் வாகை மலரும், அதை சுற்றி நட்சத்திரங்களும் வாகை மலர் பக்கவாட்டில் பிளிறும் இரு போர் யானைகளும் அமைந்திருக்கும் படி கொடி வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த கொடிக்குப் பின்னால் ஒரு சுவாரஸ்ய வரலாறு இருப்பதாகவும் அதை கட்சியின் முதல் மாநில மாநாட்டில் சொல்வதாகவும் விஜய் கூறியிருக்கிறார்.

இந்தக் கொடிக்கு தற்போது சிக்கல் வந்துள்ளது. தேசிய கட்சியான பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமான யானை படத்தை பயன்படுத்துவது தேர்தல் விதியின்படி தவறானது. உடனடியாக விஜய் கட்சியின் கொடியில் உள்ள யானை படத்தை நீக்க வேண்டும். இல்லையென்றால் தேர்தல் ஆணையத்திடம் புகார் மனுவும் மற்றும் வழக்கும் தொடுக்கப்படும் என தமிழ்நாடு பகுஜன் சமாஜ் கட்சி ஆட்சேபம் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நடிகர் விஜய் தவெக (tvk) என தனது கட்சியை அறிமுகப்படுத்தி அதன் சுருக்கெழுத்தாக டிவிகே என பயன்பாட்டிற்கு கொண்டு வந்த ஆரம்ப காலத்திலேயே தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் தங்கள் கட்சியை அப்படித்தான் குறிப்பிட்டு வந்தோம் என சொல்லி தவெகவுக்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தது நினைவிருக்கலாம்.

இதுமட்டுமல்லாது, விஜய் கட்சியின் இந்த யானை சின்னம் ஃபெவிகால் லோகோவை திருப்பி போட்டு விட்டார் எனவும், ஸ்பெயின் நாட்டு கொடியை காப்பி அடித்து விட்டார் எனவும் கட்சி கொடி அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலேயே மீம்ஸ்களாக இணையத்தில் வலம் வரத் தொடங்கி உள்ளது.

இந்தோனேசியா

# முதலை தாக்கிய பெண் மரணம்

இந்தோனேசியாவில் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த பெண்ணை முதலை தாக்கி கொன்றதாக அந்நாட்டுக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதலைக்கு இரையான பெண்ணான, 54 வயது ஹலிமாவின் உடல் உறுப்புகளை முதலையிடமிருந்து கிராமவாசிகள் மீட்டுள்ளனர்.

அந்நாட்டில் உள்ள, வாலி (Wali) எனும் கிராமத்திலுள்ள ஆற்றில் நீந்திக்கொண்டிருந்தபோது முதலைக்கு அவர் இரையானதாகத் தெரியவருகின்றது.

சிப்பி பொறுக்க ஆற்றுக்குச் சென்ற அவர் பின்னர் அதில் குளித்தார் என்று நம்பப்படுகிறது.

ஹலிமா வீடு திரும்பாதமை நிலையில், அவரின் உறவினர்களும் நண்பர்களும் அவரைத் தேடியபோது, ஆற்றில் அவரது காலணியும் ஓர் உடல் உறுப்பும் தென்பட்டதாக கிராமவாசிகள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். அதன்பிறகே, அவர் முதலைக்கு இரையானமை தெரியவந்துள்ளது.

# பாகிஸ்தான் பாராளுமன்றில் எலித் தொல்லை

இஸ்லாமாபாத்



பாகிஸ்தான் நாட்டின் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெறும் கட்டடத்தில் எலித் தொல்லையால் சிறு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதாவது, 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற சந்திப்புகளின் பதிவுகள் கோரப்பட்டபோது, அவற்றில் பெரும்பாலானவற்றை எலிகள் கடித்து வைத்திருந்தது.

இந்நிலையில், அந்நாட்டு பாராளுமன்றப் பேச்சாளர் ஸாஃபர் சுல்தான் பேசுகையில், “இங்குள்ள எலிகளைக் கண்டால் பூனைகளே அஞ்சும். அவை அவ்வளவு பெரியவை” என்று தெரிவித்தார்.

அதேசமயம், அங்கு எலிகள் பெரும் எண்ணிக்கையில் பரவியுள்ளதால், அவற்றை அகற்ற 1.2 மில்லியன் ரூபாய் (சுமார் 6,000 வெள்ளி) செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அனகபள்ளி



ஆந்திர தொழிற்சாலை வெடி விபத்தில்

# 14 பேர் பலி

ஆந்திராவில் உள்ள தனியார் மருந்து தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில், 14 பேர் பலியான நிலையில் 5 பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலம் அனகாபள்ளி மாவட்டத்தில் உள்ள அச்சுதாபுரத்தில் எஸ்சென்ஷியா என்ற பெயரில் மருந்து தொழிற்சாலை ஒன்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்ற நிலையில், நேற்று அங்கு, தொழில்நுட்ப கோளாறு காரணமாக வெடி விபத்து சம்பவித்துள்ளது.

அப்போது அங்கு வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், வெடி விபத்தின் போது நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணியில் இருந்ததாகவும் தொடர் மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், மீட்பு பணிகள் தொடர்வதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் அபாயம் நிலவுகிறது.

தொடர்ந்து படுகாயங்களுடன் மீட்கப்பட்ட ஐந்து பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# 236 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில், தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 236 ஓட்டங்களை இலங்கை பெற்றுள்ளது.



மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் இப்போட்டியானது ஓல்ட் ட்ரஃபோர்ட்டில் புதன்கிழமை (21) ஆரம்பித்திருந்த நிலையில், நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் தனஞ்சய டி சில்வா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இலங்கை சார்பாக வேகப்பந்துவீச்சாளர் மிலான் ரத்னாயக்க அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, குஸ் அட்கின்ஸன் (2),கிறிஸ் வோக்ஸ் (3), மார்க் வூட், ஷொய்ப் பஷிரிடம் (3) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியபோதும், டி சில்வாவின் 74, ரத்னாயக்கவின் 72, குசல் மென்டிஸின் 24 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 236 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, முதல் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 22 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பென் டக்கெட் 13 ஓட்டங்களுடனும், டான் லோரன்ஸ் ஒன்பது ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமலுள்ளனர்.

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டம்:

# தெல்லிப்பளை மகாஜனா சம்பியன்

அஸ்ஹர் இப்றாஹிம்

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயது பெண்கள் கால்பந்தாட்டத் தொடரில் போட்டியில் யாழ்ப்பாணம் ,தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி சம்பியனானது.

யாழ்ப்பாணம் அருணோதயக் கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை ( 18) நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் புங்குடுதீவு மத்திய கல்லூரியைச் சந்தித்த மகாஜனா 6-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது.

இவ்வாண்டுடன் மகாஜனா கல்லூரி 20 வயதுப் பெண்கள் அணி தொடர்ந்து ஒன்பதாவது சம்பியன்களாக வலம் வருகின்றது.



சதுரங்கத்தில்

# கிழக்கு மாகாண சம்பியன்களாக கல்முனை சாஹிரா தடம்பதிப்பு

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்துக்கான சதுரங்க போட்டி திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்றபோது ஆண்களுக்கான 20 வயது பிரிவில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மாணவன் எம்.ஏ.தமீம் சம்பியனாகவும், ஆண்களுக்கான 17 வயது பிரிவில் எம்.இசட். எம்.சனீப் சம்பியனாகவும் அதே பிரிவில் ஏ.எஸ்.ஏ.மிஜ்வாத் இரண்டானிடத்தையும், ஆண்களுக்கான 15 வயது பிரிவில் ஏ.அர்ஹம் பரவீஸ் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு, எம்.ஜே.ஐ.சஹ்மி, எம்.என்.எம். நிசாத், ஏ.ஏ.அனூப் மற்றும் டீ.ஏ.செய்மி ஆகிய மாணவர்களும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகினர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 23 ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.